[1972 பிப்ரவரி 1

உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடக் கட்டடம்

* 218 வின.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், விஜயாபுரம் உயர்நிலைப் பள்ளி கட்டடக் குழுவிடமிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு 11—6—71-ம் தேதியிட்ட விஞ்ஞான கூடம் பற்றி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இந்தப் பள்ளியின் விண்ணப்பத்தை பரிசிலித்ததில், மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததாலும், மற்ற பல பள்ளிகளில் அதிகமான எண்ணிக்கை இருந்தும் அறிவியல் சாதனங்கள் குறைவாக இருப்பதன் காரணமாகவும் இந்த ஆண்டு மேற்கண்ட உயர்நிலைப் பள்ளியை அரசுக்கு பரிந்துரைக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, நகரத்தை ஒட்டியிருக்கிற கிராமங்களில் இருக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் இல்லாத காரணத்தால் மாணவர்கள் நகரத்திற்கு வந்துவிடுகிறுர்கள். அப்படிப்பட்ட இடங்களில் விஞ்ஞானக் கூடம் இருக்குமானுல், ஆங்காங்கு இருக்கும் கிராம மக்கள் ஆங்காங்கு இருக்கும் அந்தப் பள்ளிகளிலேயே பயிலுவதற்கு வாய்ப்பு இருக்கும். அந்தப் பள்ளிக்கூடங்களே பொதுமக்களிடமிருந்து நன்கொடை வசூலித்து விஞ்ஞானக் கூடங்கள் அமைத்துக்கொண்டால், அதற்கு அரசாங்கம் உதவியளிக்க முன்வருமா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைக்கிற முழு செலவையும் அரசே ஏற்றுக்கொண்டு மானியம் வழங்குகிறது. கட்டடம் கட்டுவதற்காக ரூ. 25,000/-ம், கருவிகள் வாங்குவதற்காக ரூ. 15,000/-ம் கொடுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 60-70 பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்கு வசதி செய்யப்படுகிறது. அந்த வகையில் 500 மாணவர்களுக்கு மேல் உள்ள பெரிய பள்ளிகள் —1000-1500 மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகள்—என்று பல பள்ளிகள் இருக்கின்றன, அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இல்லாத பெரிய பள்ளிகளுக்கு முதலில் இந்த வசதி செய்து தரப்படுகிறது. குறிப்பிட்ட பள்ளிக்கு போதுமான அளவு மாணவர்கள் இல்லாத காரணத்தாலும், அதிகப்படியான மாணவர்கள் உள்ள பள்ளிக்கு முதலிடம் அளிக்கவேண்டிய காரணத்தாலும், முறையோடு இவற்றை ஏற்படுத்திக் கொண்டு வருகிற காரணத்தாலும், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்தக்குறை நீங்க வழியேற்படும்.